**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், குடவாசல்**

2026-ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 11-ம் நாள் புதன்கிழமை

**<u>O.S. No.66/2025</u>**

வாதி தரப்பு சாட்சியாகிய PW.2 ன் வாக்குமூலம் (1969-ம் ஆண்டின் 44-வது சட்ட ஏற்பாட்டின் படி) திரு. M. முகம்மது அர்ஷத் பரீத், B.B.A., LLB., (HONS)., மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர், குடவாசல் அவர்களால் ஆணையிட்டு உறுதி கூறப்பட்டது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | ராபின்சன் | தாலுக்கா | : | குடவாசல் |
| த/க/பெ. | : | ஏசு | கிராமம் | : | திரியம்பகபுறம் |
| | | | தொழில் | : | தனியார் ஊழியர் |
| | | | வயது | : | 42 |

**<u>3 முதல் 5 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

வாதி என்ன பரிகாரம் கோரி நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்த விபரம் எனக்கு தெரியுமா என்றால் இடம் சம்மந்தமாக வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. வாதி எனது சித்தப்பா ஆவார். நான் எங்கு வேலை பார்க்கிறேன் என்றால் சென்னையில் வேலை பார்த்து வருகிறேன். 1,2 பிரதிவாதிகள் வழக்கு சொத்து உள்ள ஊரில் வசித்து வருகிறார்கள் என்றால் சரிதான். வாதியின் தகப்பனார் பெயர் தெரியுமா என்றால் தெரியாது. அவர் எந்த ஆண்டு இறந்து போனார் என்று தெரியுமா என்றால் தெரியாது. வாதிக்கு உடன்பிறந்தவர்கள் எத்தனை நபர்கள் என்றால் 3 சகோதரிகள் 2 சகோதரர்கள் உள்ளார்கள். வழக்கு சொத்து வாதியின் தகப்பனார் சந்தியாகுக்கு எவ்வாறு வழங்கப்பட்டது என்றால் எம்.ஜி.ஆர் காலகட்டத்தில் பட்டா வழங்கப்பட்டது. நான் அந்த காலக்கட்டத்தில் அந்த ஊரில் வசித்து வந்தேன் என்றால் சரிதான். வாதியின் தகப்பனார் பெயருக்கு பட்டா வழங்கப்பட்ட ஆவணத்தை பார்த்துள்ளேனா என்றால் பார்த்துள்ளேன். நான் வருவாய் ஆவணங்களை பார்க்கவில்லை என்றாலும் வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றாலும் சரியல்ல. வாதி வேளாங்கண்ணியில் எத்தனை ஆண்டு வேலை பார்த்து வந்தார் என்று தெரியுமா என்றால் எத்தனை ஆண்டு என்று சரியாக நினைவில்லை. வாதியின் உடன்பிறந்தவர்கள் தற்போது உயிரோடு உள்ளார்களா என்றால் சரியாக தெரியவில்லை. வழக்கு விபரங்கள் தெரியாமல் வாதிக்கு ஆதரவாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

Taken down by the typist under my dictation in open Court read over to the witness admitted and acknowledged by him to be Correct.

MOHAMED ARSHAD FAREED M

Digitally signed by MOHAMED ARSHAD FAREED M
DN: cn=MOHAMED ARSHAD FAREED M, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN
Date: 2026.02.11 18:15:11 +05'30'

District Munsif-Cum-Judicial Magistrate,
Kodavasal.